**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP No.289/2023**

நாள் 24.04.2025

**ம.சா.1. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தான் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பாக நான் வாங்கிய சம்பளத்தை விட தற்போது கூடுதலாக தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தில் நான் எடுத்துக்கொண்ட விடுப்புகள் எல்லாம் ஊதியத்துடன் தான் என்றால் சரிதான். விபத்து தொடர்பாக எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது அலுவலகத்திற்கு சென்று சரியாக பணியாற்றி வருகிறேன் என்று சொன்னால் நான் ஒரு நபர் துணையுடன் தான் அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் சரியாக உட்கார முடியாது. கஷ்டப்பட்டு தான் வேலை செய்கிறேன். இந்த விபத்தினால் எனக்கு எந்த விதமான வருமான இழப்பும், நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்று சொன்னால் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற இருசக்கர மோட்டார் சைக்கிள் யாருடையது என்றால் என்னுடையது தான். எனது ஓட்டுநர் உரிமம், காப்பீடு பாலீசி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த விபத்து ஏற்பட்டது பாம் பள்ளி அருகில் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பள்ளி அருகே இருப்பதால் வேகத்தடை இருக்கும் என்றும், அதனால் 1–ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வர வாய்ப்பு இல்லை என்று சொன்னால் விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை இல்லை. நான் தான் தவறான திசையில் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

ம.சா.ஆ.3–ன் படி விபத்து நடந்த போது 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டால் அதை மட்டும் தான் நஷ்ட ஈடு தொகை பெற வேண்டும் என்றும், 3–ம் தரப்பினருக்கு விபத்து ஏற்பட்டால் காப்பீடு நிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து தேதியான 17.06.2023–ல் 3–ம் தரப்பினருக்கு நஷ்ட ஈடு வழங்கக்கூடிய காப்பீடு நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் தான் நிலுவையில் இருந்தது என்றும், அவர்களிடம் தான் நீங்கள் இழப்பீடு கோர முடியும் என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரருக்கு பாலீசி இல்லாததால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.